(முற்பகல் 11–10)

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்னர், சம்பந்தப்பட்ட பகுதியில் வசிக்கக்கூடிய அந்த ஏழைத் தொழிலாளர்கள் ஒரு பள்ளத் திலே குடியிருந்தார்கள். மழை பெய்து வெள்ளம் வந்தபோது அரசு அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் அவர்கள் காட்டிய இடத்தில் தான் அப்போது குடி கொண்டார்கள். அப்படி 7 ஆண்டுக்காலம் சொந்தச் செலவில் வீடு கட்டிக் கொண்டு வாழ்ந்து வரும் அந்த ஏழைத் தொழிலாளர்களின் அந்தப் பகுதியை கோவை மாவட்ட ஆட்சித் தலைவரும், வருவாய்த்துறை அதிகாரியும் பார்வையிட்டுப் பரிசீலித்து இந்த இடம் வேறு எதற்கும் பயன்படாது, ஆகவே அவர் களுக்கே கொடுத்து விடலாம் என்று பரிந்துரை செய்திருப்ப தாக நான் கருதுகிறேன். எனவே இப்போதாவது மனிதாபி மான அடிப்படையில், வெறும் சட்டத்திட்டங்களின் நுணுக்கங் களையே பார்த்துக் கொண்டிருக்காமல், மனிதாபிமான அடிப் படையில் அவர்களுக்கே பட்டா போட்டு கொடுப்பதற்கும், அதை யும் நடைமுறையில் காலதாமதம் இல்லாமல் செய்வதற்கும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல கோவை மாவட்டத்தைச் சேர்ந்த வருவாய் துறை அதிகாரி அந்த நிலம் வேறு வகையில் பயன் படுத்த முடியாத நிலம், விவசாயம் கூட செய்ய முடியாது என் றும் எனவே அவர்களுக்கே மனைப் பட்டா வழங்கலாம் ஆட்சே பனை எதுவும் இல்லை என்றெல்லாம் சொல்லி பரிந்துரை செய் திருக்கிறார்கள். வருவாய் துறையின் சிறப்பு ஆணையாளர் அவர்களின் பரிந்துரையும் அரசுக்கு வந்திருக்கிறது. அவைகள் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. எந்த நிலையில் இருக்கிறது என்று இப்போது என்னால் சொல்ல இயலாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நியாயத்தின் அடிப்படையில், சட்டத்தின் அடிப்படையில் வழங்கா விட்டாலும் கருணையின் அடிப்படை யில் வழங்குங்கள் என்று சொன்னார்கள். நியாயத்தின் அடிப் படையில் இதை ஒப்புக் கொள்ள மாட்டேன். கருணையின் அடிப்படையில் வேண்டுமானால் பரிசீலிக்கலாம்.

(ஆ). டாசல் நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்குதல்.

திரு. செ. செம்மலை: : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' டாசல் நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதால் இந்த நிறுவனம் மூடப்படவிருக்கிறது என்ற நிலை யில் அந்த நிறுவனத்தின்கீழ் இயங்கி வரும் தொழிற்கூடங்களில் பணியாற்றி வரும் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள

அச்சம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விளக்க அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தொழில் வணிகத் துறை மற்றும் டான்சி நிறுவனத்தின் கீழ் இயங்கி வந்த பீங்கான் தொழிற் பிரிவுகள், 1974 ஆம் ஆண்டு டாசல் நிறுவனம் நிறுவப்பட்டவுடன், அந்நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன. இப்பிரிவுகள் பெரும்பாலும் அவற்றின் ஆரம்ப காலத்திலிருந்தே தொடர்ந்து இழப்பில் இயங்கி வருகின்றன. இத்தொடர் இழப்பிற்கு, அதிக மூலதன முதலீடு, குறைந்த உற்பத்தித் திறன், அதிக உற்பத்திச் செலவு, மூலப் பொருட்கள் மற்றும் நிலக்கரி போன்ற இடுபொருட்களின் விலையேற்றம், அதிக தொழிலாளர்கள் எண்ணிக்கை மற்றும் அங்காடியில் மற்ற தனியார் நிறுவனங்களின் போட்டியால் டாசலின் உற்பத்திப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தேவைக் குறைவு ஆகியவை சில முக்கியமான காரணங்களாகும். 31-3-1986 அன்றுள்ளபடி டாசல் நிறுவனப் பிரிவுகளின் இயக்கம் குறித்த விவரம் பின்வருமாறு :—

பிரிவின் பெயர்.	31-3-1986 அன்றுவரை சேர்ந்துள்ள இழப்பு. (ரூபாய் இலட்சத்தில்)
1. பீங்கான் தொழிலகம் (துப்புரவு சாதனங்கள் பிரிவு), விருத்தாசலம்	89.41
2. கற்குழாய் தொழிற்சாலை, விருத்தாசலம் ..	31.91
3. இயந்திரச் செங்கற் தொழிற்சாலை, திருமழிசை.	150.47
4. பீங்கான் தொழிற்பேட்டை மற்றும் சேவை மையம், விருத்தாசலம்	68.22
5. கலை மட்பாண்ட நிலையம், விருத்தாசலம்	42.47
6. பீங்கான் மையம், ஓமலூர் ..	34.06
சேர்ந்துள்ள மொத்த இழப்பு ..	416.54

[திரு. க. இராசாராம்] [1987 மே 6

2. டாசல் நிறுவனப் பிரிவுகளின் இயக்கம் குறித்து ஆய்வு செய்த பொது நிறுவனங்கள் குழு, தனது 1983—84 மற்றும் 1984—85 ஆம் ஆண்டுக்கான அறிக்கைகளில் பின்வருமாறு பரிந்துரை செய்துள்ளது :—

(அ) அதிக இழப்புடன் வணிக ரீதியில் நிலைத்து இயங்க இயலாத பிரிவுகளை மூடிவிடுவதுபற்றி அரசு ஆய்வு செய்யலாம்;

(ஆ) அடிப்படையில் பயிற்சி மையங்களாக இயங்கும் பிரிவுகளை துறையே ஏற்று நடத்தலாம் (அல்லது) அரசு தக்க மானியம் அளிக்கலாம் ;

(இ) திருமழிசை இயந்திரச் செங்கற் தொழிற்சாலை, டாசல் நிறுவனத்தின் நிதி ஆதாரத்தை பெருமளவில் குறைக்கும் விதத்தில் இயங்கி வருவதால், மேற்கொண்டும் நிறுவனத்திற்கு இழப்பு ஏற்படுவதை தவிர்க்கும்பொருட்டு இப்பிரிவின் எதிர்காலம் குறித்து அரசு விரைந்து முடிவு எடுக்கவேண்டும்.

3. பத்தி 1-ல் குறிப்பிட்டுள்ள ஆறு பிரிவுகளில், விருத்தாசலம் கலை மட்பாண்ட நிலையம் மற்றும் ஓமலூர் பீங்கான் மையம் ஆகிய இரு பிரிவுகளில், நிலக்கரி பற்றாக்குறை மற்றும் உற்பத்திப் பொருட்கள் குவிப்பு ஆகிய காரணங்களினால், ஏற்கெனவே தற்காலிக நிறுத்திவைப்பு வேலை (Lay off) வழங்கப்பட்டுள்ளது. துவக்கக் காலத்திலிருந்தே நலிவடைந்த பிரிவாக இயங்கிவரும் திருமழிசை இயந்திரச் செங்கற் தொழிற்சாலையில் பெரிய அளவில் இயந்திரங்களைப் பழுதுபார்க்கும் பணியை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் உற்பத்தி நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. துப்புரவு சாதனங்கள் தொழிற்சாலையில் ரூ. 70 இலட்சம் பெறுமான உற்பத்திப் பொருட்கள் விற்பனையாகாமல் தேங்கியுள்ளன. இயந்திரச் செங்கற் தொழிற்சாலை உள்ளிட்ட ஏனைய டாசல் நிறுவனப் பிரிவுகளை பொருளாதார ரீதியில் நிலைத்து இயங்கச் செய்யும் வகையில் எடுக்கப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.

4. மேற்கண்ட காரணங்களை கருத்தில்கொண்டு, ஆரம்பத்திலிருந்தே இழப்பில் இயங்கிவருவதும், நிலைத்திருக்க முடியாததுமான டாசல் நிறுவனப் பிரிவுகளை சீரமைக்கக் கோரும் செயற்குறிப்பு ஒன்றினை டாசல் நிறுவனத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார். இச் செயற்குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

*திரு. செ. செம்மலை : மாண்மிபுகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிறுவனம் மூடப்பட்டு விடுமோ என்ற அச்சத்தைப் போக்குகிற வகையில் அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற அறிக்கையில் கண்ட விவரங்களும், மானியக் கோரிக்கையில் அவரால் சொல்லப்பட்ட விவரங்களும் இன்றைக்கு அந்தத் தொழிலில் பணி புரியக் கூடிய 4 ஆயிரம் தொழிலாளர்களுக்கு மன நிம்மதி அளிக்கக் கூடியதாக இருக்கிறது.

என்றாலும் அந்த நிறுவனத் தலைவரிடமிருந்து அதைச் சீரமைப் பதற்கான ஆலோசனை கேட்டு அரசுக்கு வந்திருப்பதாகவும், அது பரிசீலனையில் இருப்பதாகவும் இங்கே குறிப்பிடப்பட் டிருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சரிடத்தில் கேட்டுக் கொள்ள விரும்புவது அந்தப் பரிசீலனையை விரைவுபடுத்தி எப்படி டான்சி நிறுவனத்தை சீரமைத்து நிலைத்து நிற்கக் கூடிய நிறுவனமாக மாற்றினார்களோ, அது போல இந்த நிறுவனத்தையும் நிலைத்து நிற்கச் செய்ய வேண்டும். கடந்த பத்து மாத காலம் லே-ஆப் என்ற நிலையில் மூடி யிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் அல்லல் படுகிறார் கள். அந்த சூழ்நிலைகளையெல்லாம் கருத்தில் கொண்டு துரித நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம். தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப் போல ஏற்கெனவே 4 கோடியே 16 லட்சத்து 54 ஆயிரம் ரூபாய் வரையிலும் இந்தத் துறையின் மூலம் அரசுக்கு நட்டம் ஏற்பட்டிருக்கிறது. பல முயற்சிகள் மேற்கொண்டும் இந்த நட்டத்தைத் தவிர்க்க முடியவில்லை. முயற்சிக்கலாம் என்று சொன்னார்கள். முயற்சிக்கலாமே தவிர, காப்பாற்ற முடியுமா என்பது சந் தேகமாகவே இருக்கிறது.

திரு செ. செம்மலை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது, தனியார் நிறுவனங்கள் லாபகரமாக நடத்தப்படுகின்றன என்று. அப்படி இருக்கும் போது ஏன் அரசு நிறுவனம், பொது நிறுவனம் மட்டும் லாபகரமாக நடத்தப்பட முடியாது என் பது கேள்வியாகவே இருக்கிறது. எனவே நான் விரும்புவ தெல்லாம், இப்படி சீரமைக்கின்ற நிலமையில் அந்த நிறு வனத்தை லாபகரமாக நடத்துவதற்கும், அந்தத் தொழி லாளர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கும் ஒரு வல்லுநர் குழுவை அமைத்து எப்படி அதை சீரமைப்பது என்பது குறித்து ஆராய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம். : தலைவர் அவர்களே, நல்ல ஆய்வுகளைச் செய்து கொண்டு வருகிறார்கள். தனி யார் துறையிலும் பல சங்கடங்களுக்கிடையில் தான் இந்தத் தொழில் நடந்து கொண்டிருக்கிறது. தனியார் துறையில் எல்லாவற்றையும் இயந்திரமயமாக்கி இருக்கிறார்கள். ஆனால் நாம் அப்படிச் செய்யவில்லை. அது ஒரு காரணமாக இருக் கிறது. தற்போது நடந்து கொண்டிருக்கும் ஆய்வுகளிலிருந்து நல்ல முடிவை எதிர்பார்க்கலாமென்று சொல்ல முடியவில்லை. இருந்தாலும் எதிர்ப்பார்போம்.